**தலைப்பு 260 – நுவரெலியா மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நுவரெலியா மாவட்ட செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நுவரெலியா மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவாக முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 மே 13 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நுவரெலயா மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டின் இறுதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட சொத்துக் கணக்கு மீதிகள் மற்றும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிகளுக்கு இடையே ரூபா 120,103,440 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் அது தவிர நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமை கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஏசீஏ-6 நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் 2020 சனவரி 01 ஆந் திகதி முதல் திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்குரியதான சொத்துக்களின் தேறிய பெறுமதி ரூபா 52,697,670 ஆன குறைவொன்று காண்பிக்கப்பட்ட போதும் நிதிக்கூற்றுக்களின் ஒப்பீட்டு ரீதியான தகவல்களின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் ரூபா 66,676,324 ஆல் அதிகரித்திருந்தது. | ஆரம்ப நிலுவையாக சேர்க்கப்பட்டுள்ள நிதி அல்லாத சொத்துக்கள் சரியான சொத்து வகைகளில் உள்ளடக்கப்படாமை காரணமாக மற்றும் பிரதேச செயலகங்களுக்குரிய வாகனங்களும் மாவட்டச் செயலகத்தினாலும் கணக்கிடப்பட்டிருந்தன. அதனை சரிசெய்யும் போது சொத்துக்களின் | வேறுபாட்டிற்கான காரணங்கள் இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்கள் .சீராக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | பெறுமதியில் குறைவைக் காட்டிய போதிலும், 2020 ஜனவரி 1, இல் உள்ளவாறு ஆரம்ப மீதியாக நிதி அல்லாத சொத்துக்களை கணக்கீடு செய்தமையால் பெறுமதி அதிகரிப்பொன்று காண்பித்துள்ளதாக | |
| (ஆ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் காணி, கட்டிடங்களின் பெறுமதி ரூபா 2,043,782,125 ஆக இருந்த போதும் ஏசீஏ – 6 நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ரூபா 2,117,877,419 என கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தமையால் ரூபா 74,095,294 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. மேலும் வலப்பனை பிரதேச செயலகத்திற்குரிய காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பரீட்சித்து பதிலை சமர்ப்பிப்பதாக | வேறுபாட்டிற்கான காரணங்கள் இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்கள் .சீராக்கப்பட வேண்டியதுடன் வலப்பனை பிரதேச செயலகத்திற்குரிய காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வாகன உப பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 108,333,929 ஆக இருந்ததுடன் ஏசீஏ -6 நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 113,158,429 ஆக இருந்தமையால் ரூபா 4,824,500 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது | பரீட்சித்து பதிலை சமர்ப்பிப்பதாக | வேறுபாட்டிற்கான காரணங்கள் இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்கள் .சீராக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

-----------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ACA – 6 நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் 2019 திசெம்பர் 31 உள்ளவாறு காண்பிக்கப்பட்டிருந்த மீதிகள் மீளாய்வாண்டில் ஆரம்ப மீதியொன்றாக பதிவு செய்யும் போது 10 சொத்துக்கள் குறியீடுகளில் ரூபா 120,103,440 ஆன வேறுபாடொன்று காணப்பட்டதுடன் அந்த ஆரம்ப மீதிகள் சீராக்கங்களுக்குரிய சான்றுகள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | அலுவலகத்திற்குச் சொந்தமான ஆரம்ப சொத்துக்களை கணக்கீடு செய்தல் அனைத்தும் முன்னைய ஆண்டில் பூர்த்தி செய்யப்படாமையால் அவ்வாறு உள்ளடக்கப்படத சொத்துக்கள் ஆரம்ப மீதிகளாக கணக்கிடப்பட்டுள்ளன. | தவறுகளை திருத்தம் செய்யும் போது அதற்காக அங்கீகரிக்கப்பட்ட நாட்குறிப்பு பிரதிகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| | 2020 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட கணக்காளர் உத்தியோகபூர்வ விடுதியின் செலவினங்களை கணக்கீடு செய்யும் புதிய சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 4,323,521 பெறுமதியான பகுதிக் கொடுப்பனவு சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் சொத்துக்கள் கணக்கீடு செய்யும் போது உத்தியோகத்தர்களின் அறியாமையால் பெறுமதி சேர்த்தல்களாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனால் அப்பெறுமதி ஆரமப மீதிக்கு உள்ளடக்கப்பட்டுள்ளதால் மீதிகளுக்கு இடையே வேறுபாடு ஏற்பட்டுள்ளதாகவும் இதன் பிறகு ஆரம்ப மீதிகளை உள்ளடக்கினால் குறித்த நாட்குறிப்பு பதிவுகளின் பிரதிகளை சமர்ப்பிப்பதற்கு அறிவித்துள்ளதாக | |

## 2. நிதி மீளாய்வு

--------------------------

### 2.1 ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து மீளாய்வாண்டில் மீண்டெழும் மற்றும் மூலதன செலவின விடயங்களை மேற்கொள்வதற்காக மாவட்ட செயலகத்திற்கு கிடைத்த நிதிஏற்பாடுகளிலிருந்து 3 சதவீதம் முதல் 68 சதவீதம் வரையான வீச்சளவில் சேமிக்கப்பட்டிருந்தது. | கொவிட் நிலைமை காரணமாக செயற்திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் இருந்தது. | கிடைக்கும் நிதிஏற்பாடு களிலிருந்து ஆகக்கூடிய மட்டத்தில் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | அவதானிப்பு<br>இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 13.2 ஆம் பிரிவு | ஓவ்வொரு ஆரம்ப புலனாய்வையும் தாமதமின்றி பூர்த்தி செய்வதற்கு உத்தியோகத்தர்கள் பொறுப்பாக இருக்க வேண்டிய போதும் ஹங்குரன்கெத பிரதேச செயலகத்தில் 02 சந்தர்ப்பங்களில் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப புலனாய்வு நடவடிக்கைகளுக்காக நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் அவ்வப்போது மாறியமையால் அறிக்கையை அனுப்புவதற்கு தாமதமானதாக | ஓவ்வொரு ஆரம்ப புலனாய்வும் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தாமதமின்றி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 138 மற்றும் 245 | வலப்பனை, ஹங்குரன்கெத மற்றும் நுவரெலியா மற்றும் கொத்மலை பிரதேச செயலகங்களுக்குரிய ரூபா 25,190,404 பெறுமதியான 30 உறுதிச்சீட்டுக்களுக்காக சான்றுறுதிப்படுத்தாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | கொவிட் 19 நிலைமை காரணமாக உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக சேவைக்கு அறிக்கையிடாமையால் தாமதம் காரணமாக சான்றுறுதிப்படுத்த முடியாமல் போனதாக ஹங்குரன்கெத பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்ததாக | நிதிப்பிரமாணம் 138 மற்றும் 245 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 206 | வைப்புக்களிலிருந்து பணத்தை திருப்பிச் செலுத்தும் 6 சந்தர்ப்பங்களின் போது உறுதிச்சீட்டுக்கள் இரண்டு உத்தியோகத்தர்களால் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போது கொடுப்பனவின் போது இரண்டு உத்தியோகத்தர்களால் சான்றுறுதிப்படுத்தப்படுவதாக | நிதிப்பிரமாணம் 206 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 முற்பணங்களை வழங்குதலும் தீர்வுசெய்தலும்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்படும் ரூபா 900,878 ஆன கட்டுநிதி மீதயொன்று 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2012 ஆம் ஆண்டிலிருந்து ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு செலுத்தப்படும் முற்பணமொன்று அறவிடப்படாமையால் இந்நிலைமை உருவாகியுள்ளதாகவும் 2018 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட அமைச்சரவை தீர்மானமொன்றின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகளுக்காக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | தீர்வு செய்யப்படாத முற்பண மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.4 வைப்பு மீதிகள்

நிதிக்கூற்றுக்களுக்குரிய வைப்புக்கள் கொடுப்பனவு மற்றும் மீதிகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படாத செயற் திட்டங்களுக்காக கொடுப்பனவு செய்வதற்காக ஒவ்வொரு ஒவ்வொரு செயற்திட்டத்தின் பெறுமதியில் 40 சதவீதம் அல்லது 30 சதவீப்படி ரூபா 68,038,199 தொகை நிதிப்பிரமாணம் 215(3) இன் ஏற்பாடுகளுக்கு புறம்பாக 6000/0/0/16/0/16 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. | 2020 திசெம்பர் மாதம் இறுதியின் போது கொங்கிரீட் இட்டு முடிவடைந்த வீதிகளின் திசெம்பர் 31 இற்கு முன்னர் ஹெமர் டெஸ்ட் பரிசோதனை அறிக்கை பெற்றுக்கொள்வதில் சிக்கல்களாக உள்ளதால் வீதிகளின் தடிப்பு தொடர்பாக பரிசோதனைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு கொடுப்பனவு செய்வதற்காக செயற்திட்ட பெறுமதியில் 30 சதவீதம் மேலதிக நிறுத்தி வைத்தல் பணமாக வைக்கப்பட்டுள்ளதாக. | நிதிப்பிரமாணம் 215(3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வைப்புச் செய்யப்பட்ட திகதி முதல் 10 ஆண்டுகளை மிகைத்த ரூபா 8,831,545 தொகையான காணி 14 வைப்புக்கள் மீதிகளை தீர்வு செய்வது தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இழப்பீடு பரிசோதனை நடவடிக்கைகளை பூர்த்தி செய்யும் வரை பணத்தை நிறுத்தி வைத்துள்ளதாக | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வைப்புக்கள் தீர்வு செய்யப்பட வேண்டும் 215(3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 34 ஆம் இலக்க கேடன் விளேஜ் உத்தியோகபூர்வ விடுதிகளை திருத்தம் செய்வதற்காக ரூபா 720,849 மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 747,768 என திருத்தம் செய்யப்பட்டிருந்தது. பூச்சு பூசுதல், கொங்கிரீட் தளத்தின் மூலம் நீர் கசிதல் மற்றும் வெளிப்பாடு பலவீனமான மட்டத்தில் காணப்படுதல் போன்ற குறைபாடுகள் காணப்பட்ட போதும் சங்கத்திற்கு ரூபா ரூபா 715,437 ஆன கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தை விடுவிப்பதற்கு முன்னர் குறைபாடுகளை சீர்செய்யுமாறு ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | இறுதி பட்டியலுக்காக கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் உரிய நிர்மாண வேலையின் வெளிப்பாடு தொடர்பாக சான்றிதழொன்று பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் குறைபாடுகளை சீர் செய்ய வேண்டும். |
| (ஆ) | நிதி அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட ‘‘சுப்பிரி கமக்’’ நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி ஏற்பாடுகளின் கீழ், ரூபா 496,947 ஆன பூர்த்தி செய்யப்பட்ட வேலைப் பெறுமானத்தை உடைய மவுண்ட் வர்னன் மத்திய பிரிவுக்கு நீர் வழங்கல் செயற்திட்டத்திற்கான கொங்கிரீட் குழாய்களை நிறுவுதல், சகல உதிரி பாகங்களுடன் PVC குழாய்களை பதித்தல் மற்றும் மின்சாரத்தை வழங்குதல் என்ற வகையில் செயற்பாடொன்று உள்ளடக்கப்பட்டு ஒரு செயற்திட்டமொன்றாக திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் பௌதீக பரிசோதனையின் போது மின்சாரத்தை வழங்குதல் ஒரு செயற்திட்டமாகவும் மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட ஏனைய செயற்பாடுகள் வேறொரு திட்டமாகவும் | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | விரைவில் நீர் இணைப்பினை வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மின்சார சபையால் வழங்கப்பட்ட மதிப்பீடு மற்றும் பணக் கொடுப்பனவின் போது வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறைவேற்றப்பட்டிருந்தது. கொங்கிரீட் குழாய்கள் அமைத்தல் மற்றும் PVC நீர் குழாய்களைப் பதிப்பதற்கான ரூபா 296,947 தொகையான கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் 2021 பெப்ரவரி 19 ஆந் திகதி வரை நீர் வழங்கல் செயற்பாடு நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தின் வேறொரு திட்டமாக மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 200,000 தொகை குறித்த ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்த போதும் அதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியலில் பணம் செலுத்தும் தரப்பினரின் பெயர் ‘‘முகாமையாளர்’’ எனக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் இப்பணம் செயற்திட்டத்திற்குரிய செயற்பாட்டிற்காக ஒப்பந்தக்காரராலேயே செய்யப்பட்ட கிரயமொன்றா என உறுதிப்படுத்தாமல் குறித்த சங்கத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ரூபா 3,000,000 நிதிஏற்பாடுகளின் பேரில் செயற்படுத்தப்பட்ட ரம்பொட மேல் கடைவீதி ஆபத்தான கற்களை அகற்றும் செயற்திட்டத்தின் 148.2 $m^3$ அளவிலான கற்களை அகற்றுவதற்கு ரூபா 1,940,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கற்கள் உடைத்து அகற்றப்பட்டிருந்த போதும் ஆபத்து குறையக்கூடிய வகையில் அகற்றப்படாத கற்கள் காணப்பட்டன. இக்கற்கள் ஒவ்வொன்று வெடித்து சிதறி காணப்படுகின்றன. மேலிருந்து கற்கள் விழுவதால் இடம்பெறும் ஆபத்தைக் தடுப்பதற்கு தடுப்பு வடிகாணொன்று பள்ளத்திற்கு குறுக்காக இட்டு அதில் நீர் நிரம்பாமல் இருக்கும் வகையில் பேணிச்செல்ல வேண்டியதுடன் காணிற்கு வெளியே தடுப்பு பகுதியொன்றை நிர்மாணிப்பதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் பரிந்துரை வழங்கப்பட்டிருந்த போதும் அச்செயற்பாடு எதுவம் இம்மதிப்பீட்டில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | பெறப்பட்ட ஒதுக்கீட்டு எல்லைக்குள் அனர்த்தத்தைக் குறைப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய கட்டாய பாகங்கள் உள்ளடக்கப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சியவற்றுக்கான தேவையான நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளதாகவும். | குறைபாடுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 எதிர்பார்த்த நலன்களைப் பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ''சுப்பிரி கமக்'' நிகழ்ச்சித் திட்டத்தின் நிதி ஏற்பாடுகளின் கீழ் ரன்வந்தலாவ கால்வாய் புனரமைப்புத் திட்டத்திற்காக ரன்வந்தலாவ கெமுனு விவசாய அமைப்புக்கு ரூபா 481,643 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. குறித்த கால்வாயின் நீரை பயிர்ச்செய்கை பிரிவிற்கு எடுத்துச் செல்வதற்கு மேலும் 100m தூரத்திற்கு கால்வாய் அமைக்கப்பட வேண்டியிருந்தது. தற்போது நீர் குழாய் பதிக்கப்பட்டு பெற்றுக் கொள்ளும் நீர் பயிர்ச்செய்கை காணியூடாக வருவதற்கு முன்னர் நிலத்திற்கு உறிஞ்சிக் கொள்வதால் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்ட போதும் 25 ஏக்கருக்கு மேற்பட்ட பயிர்ச்செய்கைக்குரிய நில அளவொன்று இதுவரை மழை நீரால் பயிர்ச்செய்கை நிறைவேற்றப்பட்டு வருகின்றது. | கிடைக்கப்பெற்ற நிதி ஏற்பாடுகளின் அளவுக்கு வேலைகள் நிறைவேற்றப் பட்டுள்ளதாக | திட்டங்களைத் திட்டமிடும் போது செயற்திறன் தொடர்பாக கவனத்திற் கொள்ள வேண்டியதுடன் கால்வாயின் எஞ்சிய பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) ''சுப்பிரி கமக்'' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த விதுலிபுற தெற்கு நூலக கட்டிடத்தின் மேல் மாடியில் சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிலையத்திற்கு அலுமினியம் கதவு மற்றும் யன்னல் உட்பட அனைத்து கருவிகளையும் சேர்த்து வழங்கி பொருத்துவதற்காக ரூபா .453,334 ஆன மதிப்பீடு உள்ளடக்கப்பட்டிருந்த போதும் பின்னர் அது இரண்டாம் கட்டமாக அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக அச்செயற்பாட்டை நிறைவேற்றும் வரை குறித்த கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டது. | முழு வேலை பகுதியையும் நிறைவு செய்வதற்கு 2020 ஆம் ஆண்டில் நிதிஏற்பாடு போதியதாக இல்லாமையால் அலுமினியம் கதவு யன்னல் வேலைகள் 2021 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்து எதிர்பார்த்த செயற்பாட்டிற்காக கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | 2021 ஆம் ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் நிதிஏற்பாடு மேற்கொண்டு வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஹங்குரன்கெத பிரதேச செயலகப் பிரிவில் விதை போஞ்சி பயிரிடும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் கிராம சக்தி மக்கள் செயற்திட்டம் செயற்படுத்தப் பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 இல் திட்டத்திற்காக அரசிடமிருந்து ரூபா 5,311,908 தொகை செலவிடப்பட்டிருந்தது. விதை போஞ்சி குளிர் களஞ்சிய வசதிகளை வழங்குவதற்காக மந்தாரம்நுவர கமநல சேவைகள் நிலைய வளவில் முன்னைய ஆண்டில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்ட குளிர் களஞ்சியம் 2021 சனவரி 11 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | திட்டங்களை செயற்திறனாக செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாவட்டத்தின் 85 சமய நிலையங்களுக்கு சூரிய சக்தி முறைமை மூலம் மின்சாரத்தை பிறப்பிப்பதற்காக 2020 ஆம் ஆண்டில் ரூபா 42,500,000 செலவிடப்பட்டிருந்த போதும் கணக்காய்வு திகதியான 2021 மார்ச் 30 ஆந் திகதி வரை அத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | விரைவில் தேசிய மின்சார முறைமை மற்றும் தொடர்புபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மின்சார சபைக்கு அறிவிக்கப் பட்டுள்ளதாக | திட்டமிடப்பட்ட செயற் திட்டங்களால் வழங்கப்படும் நிதி ஏற்பாடுகளின் பேரில் ஆகக்கூடிய பொது மக்கள் சேவையொன்றை மேற்கொள்ளும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன் முன்னேற்றம் பெற்றிராத செயற்திட்டங்கள்

---

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ''சுப்பிரி கமக்'' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த வலப்பனை பிரதேச செயலகத்தின் ஹரஸ்பத்த 03 ஆம் இலக்க வீதியை அபிவிருத்தி யெய்வதற்குரிய தாக ரூபா 1,980,000 இற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதும் ஒப்பந்த சங்கத்தினால் ரூபா 905,013 ஆன வேலைகள் அதாவது மதிப்பீட்டின் 45 சதவீதம் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்கு மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக. | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படாமை தொடர்பாக குறித்த சங்கங்களுக்கு எதிராக அரசின் பெறுகை வழிகாட்டல் கோவை மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் நோக்கங்கள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வழங்கபப்ட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக பிரதேச செயலகங்களின் இலக்கிடப்பட்ட செயற்பாடுகளை ஒன்றுதிரட்டி மாவட்டத்திற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்றை தயாரிப்பதற்குப் பதிலாக மாவட்ட செயலகத்தின் இலக்குகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. | சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாதவாறு திட்டங்களைத் தயாரிக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | செயலாற்றல் அறிக்கை சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் செயற்திறனாகவும் மிகவும் சரியானதாகவும் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 2020 ஆம் ஆண்டில் தாபன மற்றும் கணக்கு பிரிவுகளில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்த இலக்குகள், இனங்காணப்பட்ட சேவைகளுக்காக தாபிக்கப்பட்ட வருடாந்த இலக்குகள் மற்றும் பதவியணியினர் தொடர்பான தகவல் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி - | செயல்நடவடிக்கைத் திட்டம் மிகவும் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |
| (இ) | 2020 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயலாற்றல் செயன்முன்னேற்றம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இலக்கிடப்பட்ட செயற்பாபாடுகள் உள்ளடக்கப்பட்டு தயாரக்கப்படாமை காரணமாக சில பிரிவுகளில் உரிய செயன் முன்னேற்ற செயலாற்றல் அறிக்கையில் இனங்காண முடியாமல் இருந்தது. | -மேற்படி - | சுற்றிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 பெறுகைகள்

------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வழங்குனர்களை பதிவுசெய்யும் பதிவேட்டின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்காக விளையாட்டு பொருட்களை வழங்குவதற்காக 13 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. விளையாட்டு பொருட்களை கொள்வனவு செய்வதற்காக 2020 யூன் 03 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கூறுவிலைகளின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு வழங்குனருக்கும் கூறுவிலை அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. | விசேட வகையிலான கொள்வனவு ஆக இருந்தமையால் குறித்த உபகரணங்கள் உள்ள இடங்களைப் பரீட்சித்து அந்நிறுவனங்களிடமிருந்து விலைகோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக | பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து கூறுவிலை கோரப்பட வேண்டும். |
| (ஆ) | நுவரெலியா பிரதேச செயலக பிரிவின் கிராம சேவையாளர் அலுவலகங்களுக்கு பிளாஸ்டிக் கதிரைகளை பெற்றுக்கொள்ளும் பெறுகையின் போது அதற்காக தேவையான விதந்துரைகள் அல்லது கதிரைகளின் எண்ணிக்கை என்பன குறிப்பிடப்படாமல் கூறுவிலைகள் கோரி 410 கதிரைகளை பெற்றுக் கொள்வதற்காக ரூபா 704,938 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | கொள்வனவு செய்யும் போது அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| "சுப்பிரி கமக" நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி ஏற்பாடுகளின் கீழ் ரஜ எல பிரிவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பழைய கால்வாயின் உயரம் 1' ஆகவும் அகலம் 1'.6" ஆக இருந்தது. எனினும் கால்வாயிலிருந்து வரும் மாவெல கிழக்கு பிரிவிற்கு கொண்டு செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ள கால்வாயின் உயரம் 3' ஆக இருந்ததுடன் அகலம் 2'.6" ஆக இருந்தது. 1' உயர கால்வாய்லிருந்து வரும் நீரைக் கொண்டு | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | தகைமை உடைய பொறியியலாளர் ஒருவரை கொண்டு நிர்மாணத்தை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

செல்வதற்காக 3' கால்வாயொன்று அமைத்திருந்தமை எந்தவொரு வகையிலும் பயனற்றதொன்றாக இருப்பதால் அதற்காக ரூபா 716,530 ஆன செலவினம் பயனற்ற செலவினமொன்றாக இருந்தது.

## 3.7 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 திசெம்பர் 15 ஆந் திகதிய 19/2006 ஆம் இலக்க ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளிலிருந்து விலகி ஓய்வுபெற்றவர்கள் மரணித்த 14 சந்தர்ப்பங்களில் கிராம சேவையாளர்களால் பிரதேச செயலகங்களுக்கு அறிவித்திருக்கவில்லை. கிராம சேவையாளர்களின் கவனயீனம் காரணமாக கொத்மலை மற்றும் நுவரெலியா பிரதேச செயலகங்களில் ரூபா 2,173,548 கூட்டுத்தொகை, மரணித்த ஓய்வுதியம் பெறுவபவர்களின் கணக்குகளில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் 2021 சனவரி 20 ஆந் திகதி வரை அதில் மொத்தம் ரூபா 438,833 தொகை அறவிடப்பட வேண்டியருந்தது | கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்ட தொகையை அறவிடப்பட்டு வருவதாக | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வலப்பனை பிரதேச செயலக பிரிவில் மீள் குடியேற்றுவதற்காக 189 குடும்பங்கள் இனங் காணப்பட்டிருந்தன அதில் மாற்று இடங்களில் 42 குடும்பங்களின் மீள்குடியேற்ற செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன 147 குடும்பங்கள் மேலும் அந்த ஆபத்துடைய பிரதேசங்கள் குடியிருப்பதுடன் 2014 ஆம் ஆண்டில் பழல் பதன பிரிவில் மண்சரிவு அனர்த்தத்திற்கு உட்பட்ட குடும்பங்கள் 17 ஆக இருந்தது. | தோட்டங்களை அண்மித்து 20 ஏக்கர் காணி கோரப்பட்டுள்ளதுடன பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு மற்றும் தோட்டக் கம்பனிகள் இணக்கத்தை தெரிவிக்காமை காரணமாக மீள் குடியேற்ற செயற்பாடுகள் தாமதடைந்தன. கிராமங்களை விரிவுபடுத்தும் முறைமையின் கீழ் காணிகளை கையேற்பதற்கு உரிய முன்மொழிவொன்று தயாரிக்கப்பட்டு வருவதாக | வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் மூலம் அனர்த்தங்களுக்கு உள்ளான பொது மக்களுக்கு விரைவில் சலுகை வழங்குவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2011 பெப்ரவரி 10 ஆந் திகதிய 2011/1 ஆம் இலக்க தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் மண் | கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்து அறிக்கையை பெற்றுக் | நிர்மாணங்களின் போது அனைத்து சட்டரீதியான |

| | | | |
|---|---|---|---|
| | சரிவு ஆபத்துள்ள மாவட்டமாக இனங்காணப்பட்டுள்ள நுவரெலியா மாவட்டத்தில் எவ்வித நிர்மாண செயற்பாடொன்றிற்காக தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் தகைமை சான்றிதழ் / பரிந்துரை பெற்றுக்கொள்ளப்படாமல் இருந்ததுடன் எந்தவொரு செயற்திட்டத்தினதும் கட்டிட திட்டங்கள் உள்ளூராட்சின்றத்தால் அங்கீகரிகக்ப்பட்டிருக்கவில்லை. | கொள்ளும் போது ஏற்கக் கூடிய செலவினை தீர்வு செய்வதற்கு நுழைவொன்று இல்லாது போதல் சிக்கலொன்றாக உள்ளதாகவும் எதிர்காலத்தில் அனைத்து நிர்மாணங்களுக்குமாக சுட்டிக்காட்டப்பட்ட வகையில் நடவடிக்கை எடுப்பதாக | தேவைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |
| (ஈ) | ‘‘சுப்பிரி கமக்’’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டில் ரூபா 1,485,000 ஆன உடன்படிக்கை பெறுமதிக்கு ஹங்கராபிட்டிய வாரச்சந்தை பொருளாதார நிலையம் நிமாணிக்கப்பட்டிருந்தது.செயற்திட்டதித்திற்குரிய 150x65x15 மி.மீ மற்றும் 100x50x12 மீமீ உடன் 2 மிமீ தடிப்பிலான C - perlin வழங்கி பொருத்துவதற்காக இறுதி பட்டியலின் விடய இலக்கம் 13 மற்றும் 14 இன் கீழ் மொத்தம் ரூபா 159,784 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br><br>செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு குறித்த தரப்பினருக்கு கையளிப்பதற்கு முன்னர் அந்த C - perlin நிறம்மாறி துரப்பிடித்தலுக்கு உள்ளாகியிருந்தது. 2021 சனவரி 29 ஆந் திகதி வரையிலும் அச்செயற்திட்டம் அம்பகமுவ பிரதேச சபைக்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | துருப்பிடித்தலுக்கு உள்ளாகியிருந்த C - perlin சுத்தப்படுத்தி துருப்பிடித்தலை தடுப்பதற்கான பூச்சினை பூசுமாறு ஒப்பந்தக்காரருக்கு ஆலோசணை வழங்கி அக்குறைபாடுகளை சீர் செய்துள்ளதாகவும் பராமரிப்பு காலப்பகுதியின் பின்னர் கட்டிடம் உரிய உள்ளூராட்சி மன்றத்திற்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பதாக | குறைபாடுகளை சரி செய்து செயற் திட்டத்தை முறையாக பிரதேச சபைக்கு கையளிக்க வேண்டும் |
| (இ) | 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் சட்டம் தொடர்பான சட்டத்தின் பிரகாரம் குறித்த தகவல்களை பொதுமக்களுக்கு அறிந்து கொள்ளும் விதத்தில் திட்ட வெளிக்கள்த்தில் காட்சிப்படுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான பிரிவுகள் நிர்மாணங்களைக் கையளிப்புக் கடிதங்களிலும் உள்ளடக்கப்பட்டிருந்தன. எனினும் பௌதீக ரீதியாக பரீட்சித்த மேற்குறித்த திட்டங்களுக்குரிய தகவல்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | திட்டங்களுக்குரிய தகவல்களை காட்சிப்படுத்ததுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஒப்பந்தக்காரர்கள் / அபிவிருத்தி உதவியாளர்களுக்கு தெரியப்படுத்தியிருந்தது போதும் சுப்பிரி கமக் நிகழ்ச்சித்திட்டத்தில் அவ்வாறான பெயர் பதாதையொன்றுக்காக மதிப்பீட்டில் பணம் ஒதுக்கீடு செய்யமாறு ஆலோசணை வழங்கப்பட்டிருக்க வில்லை. | திட்டங்கள் தொடர்பான அத்தியவசிய தகவல்களை பொது மக்களுக்கு தெரிவிக்க வேலைத் திட்டமொன்று செயற்படுத்த வேண்டும். |

## 3.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொத்மலை மற்றும் நுவரெலியா பிரதேச செயலக பிரிவுகளில் 04 நிர்மாண வேலைகளுக்குரிய நிறைவேற்றப்படாத வேலை களுக்காக ரூபா 174,935 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மிகை கொடுப்பனவினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | மிகை கொடுப்பனவு தொடர்பாக பரீட்சித்து நிதிப்பிரமாணம் 156(1) இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ''சுப்பிரி கமக்'' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொத்மலை வலப்பனை மற்றும் ஹங்குரங்கெத பிரதேச செயலக பிரிவுகளில் பூர்த்தி செய்யப்பட்ட 11 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 632,132 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மிகை கொடுப்பனவினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |

## 4. நிலைபேறான அபிவிருத்தி

### நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காணல்

| கணக்கீட்டு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2030 ஆண்டளவில் அடைந்து கொள்ளக்கூடிய நோக்கங்கள் தெளிவாக இனங்காணப்பட்டு அதன் பிரகாரம் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அது தொடர்பாக அனைத்து உத்தியோகத்தர்களும் தெரியப்படுத்தி உரிய பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்வதற்கு உரிய திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

5. **நல்லாளுகை**

---------------------

**பொது மக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்**

| கணக்கீட்டு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நுவரெலியா மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகங்களும் 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் சேவை நாடுனர் பட்டயத்தை அறிமுகப்படுத்தி செயற்படுத்தியிருந்த போதும் மின்சாரம் துண்டிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் அது தடையொன்றாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. விசேடமாக அதிக காற்று மழையுடன் காலநிலை காணப்படக்கூடிய சந்தர்ப்பத்தில் மின்துண்டிப்பினை உரிய நிலைமைக்கு கொண்டு வருவதற்கு அதிக காலமொன்று எடுக்கும் சந்தர்ப்பங்களில் அத்தியவசிய சேவைகளை நிறைவேற்றுவதற்கு வருகை தரும் மக்கள் மிகவும் சிரமங்களுக்கு உள்ளாவதற்கு நேர்ந்தது. | கிடைக்கப்பெறும் நிதி ஏற்பாட்டின் அளவின் அடிப்படையில் மின் பிறப்பாக்கியொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பதாக | போதியளவு இயலளவுடன் கூடிய மின்பிறப்பாக்கி இயந்திரமொன்றை வழங்குவதற்காக மேலதிக நிதிஏற்பாடு கோரி தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

6. **மனிதவள முகாமைத்துவம்**

---------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (ஆ) | மாவட்ட செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட 11 தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகளில் 10 பதவிகள் வெற்றிடங்களாக இருந்தன. அதன் பிரகாரம் திட்டங்களை மேற்பார்வை செய்வதற்கு போதியளவு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இல்லாமை சிக்கலொன்றாக காணப்பட்டது. | வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்களை இணைக்குமாறு கோரப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் ணே்டும் |

| | | | |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியணியின் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி சந்தர்ப்பமொன்று கிடைக்கும் வகையில் மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அம்பகமுவ, கொத்மலை, மற்றும் நுவரெலியா ஆகிய பிரதேச செயலகங்களில் அவ்வாறொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.<br>அவ்வாறே ஹங்குரங்கெத மற்றும் நுவரெலயா பிரதேச செயலகங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள 473 பேருக்கு இடையே 292 பேருக்காக 2020 ஆம் ஆண்டில் பயிற்சி சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கொவிட் நிலைமை காரணமாக கடந்த ஆண்டில் உரிய இலக்குகளை அடைய முடியாதிருந்த போதும் இவ்வாண்டில் பயிற்சியளித்தல் மேற்கொள்ளப்படுவதாக | அனைத்து உத்தியோகத்தர் களுக்கும் குறைந்த பயிற்சி காலப்பகுதியொன்று மேவுகை செய்யப்படும் வகையில் பயிற்சி சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும். |